664

Koviloor Digital Library

உ

விநாயகர் அகவல்

Acc NO 38422

ANUSHA INTERNATIONAL LTD.,
117/118, SIDCO Indl. Estate,
Ranipet - 632 403.

Koviloor Digital Library

Koviloor Digital Library

3/2
38422

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பல இசை பாடப்

பொன் அரைஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்து அழகுஎறிப்பப்

பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்

அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்

நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

Koviloor Digital Library

இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரி நூல் திகழொளி மார்பும்

சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே

முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்

தாயாய் எனக்குத் தான் எழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்

திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

Koviloor Digital Library 3/2

குருவடிவாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்து திறமிது பொருளென

வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே

உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி

ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கு
அருளிக்

கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்து இருள் கடிந்து

தலம்ஒரு நான்கும் தந்தெனக் கருளி
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே

Koviloor Digital Library

ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி

ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே

இடை பிங்கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனை கபாலமும் காட்டி

மூன்றுமண்டலத்தின் முட்டிய தூணின்
நான்று எழுபாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து

மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே

Koviloor Digital Library

அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி

இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்

சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக்கு அருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்

கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி

என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து

வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்(து)

Koviloor Digital Library

இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன்
செவியில்

எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்

சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி

அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு
அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி

வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி

அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்து எனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

Koviloor Digital Library

விநாயகர் போற்றி

108 அருச்சனை மாலை

ஓம் அத்திமுகனே போற்றி
,, அம்பிகை பாலா ,,
,, அம்மையும் அப்பா ,,
,, அருமறைக் கொழுந்தே ,,
,, அமரர்கள் கோனே ,,
,, அடியார்க்கு இனியோய் ,,
,, அங்குச பாசா ,,
,, அரு உருவானோய் ,,
,, அறுமுகன் அண்ணா ,,
,, அணுவுக் கணுவே ,,
,, அண்டங்கள் ஆனோய் ,,
,, அவல் பொரி அப்பம் அருந்துவோய்
,, பிட்டும் முப்பழமும் நுகருவாய் ,,
,, ஆதிமூலமே ,,
,, ஆருயிர்க்குயிரே ,,
,, ஆரா அமுதே ,,
,, ஆபத் சகாயா ,,
,, இருள்தனைக் கடிவோய் ,,

Koviloor Digital Library

ஓம் இடையூறு களைவோய் போற்றி
,, இன்பப் பெருக்கே ,,
,, இருவினை அறுப்போய் ,,
,, ஈசன் மகனே ,,
,, ஈரேழுலகா ,,
,, உத்தம குணாளா ,,
,, உலகெலாம் காப்பாய் ,,
,, உள்ளொளி வடிவே ,,
,, உண்மை நெறியாளா ,,
,, உம்பர்கள் தொழுவோய் ,,
,, ஊழ்வினை ஒழிப்போய் ,,
,, எங்கும் நிறைந்தோய் ,,
,, என்றும் திகழ்வோய் ,,
,, எங்கும் அமர்ந்தோய் ,,
,, எவர்க்கும் அருள்வாய் ,,
,, எதையும் முடிப்போய் ,,
,, எண்குண சீலா ,,
,, எழுபிறப்பறுப்போய் ,,
,, ஏழை பங்காளா ,,
,, ஏக நாயகனே ,,

Koviloor Digital Library

ஓம் எழில்மிகு தேவே போற்றி
,, ஔவைக் கருள்வோய் ,,
,, ஐங்கரம் உடையோய் ,,
,, ஐம்புலக் கதவை அடைப்போய் ,,
,, நான்கு புயத்தோய் ,,
,, நாவலர் பணிவோய் ,,
,, முக்கண் உடையோய் ,,
,, முழுமுதற் பொருளே ,,
,, ஒளிமித தேவே ,,
,, ஓங்கார மூர்த்தியே ,,
,, கண நாயகனே ,,
,, கருணாமூர்த்தியே ,,
,, கலைஞான குருவே ,,
,, கயமுகனைக் காய்ந்தோய் ,,
,, கற்பகக் களிறே ,,
,, கண்கண்ட தேவே ,,
,, கந்தனை வென்றோய் ,,
,, கனிதனைப் பெற்றோய் ,,
,, சங்கத் தமிழா ,,
,, சரவணன் தொழுவோய் ,,

Koviloor Digital Library

ஓம் சர்வ லோகேசா போற்றி
,, சாந்த மூர்த்தியே ,,
,, சுருதியின் முடிவே ,,
,, சொற்பதம் கடந்தோய் ,,
,, நாத கீதா ,,
,, நம்பிக் கருள்வோய் ,,
,, தவசிகள் தொழுவோய் ,,
,, தாயினும் நல்லோய் ,,
,, தரும குணாளா ,,
,, தம்பிக்கு வள்ளியை தந்தாய் ,,
,, தூயோர் துணைவா ,,
,, துறவிகள் பொருளே ,,
,, நித்தா நிமலா ,,
,, நீதி நெறி துரையே - ,,
,, நீலமேனியனே ,,
,, நிர்மலி வேணியா ,,
,, பேழை வயிற்ருேய் ,,
,, பெருச்சாளி வாகனு ,,
,, பாரதம் எழுதிஞேய் ,,
,, பாவலர் பணிவோய் ,,

Koviloor Digital Library

ஓம் பாசம் அறுப்பாய் போற்றி
,, பவப்பிணி ஒழிப்பாய் ,,
,, மும்மலம் அறுப்பாய் ,,
,, முத்தி தருவாய் ,,
,, வேழ முகத்தோய் ,,
,, வேட்கை தணிப்போய் ,,
,, வேள்வியின் முதல்வா ,,
,, வேதாந்த விமலா ,,
,, ஒழுக்க மருள்வோய் ,,
,, உடல் நலம் தருவோய் ,,
,, செல்வம் அருள்வாய் ,,
,, செருக்கினை அறுப்போய் ,,
,, சிந்தையை அடக்குவோய் ,,
,, சினம் காமம் தவிர்ப்போய் ,,
,, கல்வி அருள்வாய் ,,
,, கரத்தால் ஒழிப்பாய் ,,
,, ஔவியம் அகற்றுவாய் ,,
,, அறநெறி புகட்டுவாய் ,,
,, அவாவை அடக்குவாய் ,,
,, அன்பை வளர்ப்பாய் ,,

Koviloor Digital Library

ஓம் ஊக்கம் அருள்வாய் போற்றி
,, ஆக்கம் பெருக்குவாய் ,,
,, வலம்புரி விநாயகா ,,
,, வரமெலாம் தருவாய் ,,
,, சித்தி விநாயகா ,,
,, சிவபதம் அருள்வாய் ,,
,, சுந்தர விநாயகா ,,
,, சுகபோகம் தருவாய் ,,
,, அனைத்தும் நீயே ,,
ஓம் அமிர்தகணேசா போற்றிபோற்றியே

விநாயகர் வழிபாடு முற்றிற்று.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
38422

Koviloor Digital Library

Koviloor Digital Library



விநாயகா பிரஸ், இராணிப்பேட்டை.